மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 116/2017 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | கிருஷ்ணவேணி | நாள் | 28.08.2023 |
| கணவர் பெயர் | விஜயன் | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:–

10) தாவா சொத்தை பொறுத்து 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் சட்டத்திற்கு உட்பட்டு தான் செயல்பட முடியும் என்றால், சரிதான். தாவா சொத்தை பொறுத்து தனிப்பட்ட முறையில் பிரதிவாதிகள் செயல்பட இயலாது என்றாலும், உரிய உயர் அதிகாரிகளிடமிருந்து ஆலோசனை பெற்று அதன் அடிப்படையில்தான் செயல்பட முடியும் என்றால், சரிதான்.

11) தாவா சொத்தானது சாலையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள பகுதி என்பதால் சாலை விரிவாக்க பணிகளுக்காக பிரதிவாதிகளுக்கு தேவைப்படும் சமயத்தில் ஆக்கிரமிப்பை அகற்றி சாலை அமைக்க பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளது என்றால், சரிதான்.

12) பிரதிவாதிகள் சட்டத்துக்கு உட்பட்டு செயல்படுகிறார்கள் என்றாலும், எனவே அவர்களுக்கு எதிராக நான் எவ்வித பரிகாரமும் கோர இயலாது என்றாலும், என் வழக்கு தள்ளுபடி செய்ய அருகதையுடையது என்றாலும், சரியல்ல. பிரதிவாதிகளுக்கு நிலம் தேவைப்பட்டால் அவர்கள் நிலம் எடுத்தது போக மீதமுள்ள நிலத்தை கொடுத்தால் போதும்.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.